DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

SESSIONS CASE NO: 99/2018

| | | | |
|---|---|---|---|
| Name | : கதிரவன் | Deposition of Witness for : | P.W 1 |
| Father's Name | : அகிலன் | Caste | : |
| Age | : | Calling | : |
| Village | : | Taluk | : |
| | | District | : |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 07.01.2020

முதல் விசாரணை தொடர்ச்சி

சத்தியமாக சொல்கிறேன். எதிரி மணிகண்டன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ 9. எதிரி காளியப்பன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ 10. எதிரி பொன்மணி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ 11. எதிரி பூபதி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ 12. எதிரி சரவணக்குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ 13.

1.எதிரி மணிகண்டன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி டி.என் 09 எக்ஸ் 7729 என்ற எண்ணுள்ள டாடா சுமோ வாகனத்தை குட்டக்காடு பேருந்து நிறுத்தம் ரிலையன்ஸ் பங்க் அருகில் மேட்டுக்காடு பிரிவில் வைத்து மகஜர் எழுதி கைப்பற்றினேன். அந்த டாடா சுமோ வாகனத்தில் இருந்து சேர்மன் பைன் பிராந்தி என்று எழுதப்பட்ட 2000 லேபிள்கள் (3 கட்டு) சா.பொ. 1 வரிசை.

2. மேலும் அந்த வண்டியில் இருந்து 35 லி பிடிக்கக்கூடிய வெள்ளை நிற பிளாஸ்டிக் கேனில் விஷ நெடியுடன் கூடிய 10 லி எரிசாராயம் கைப்பற்றினேன். மேற்படி எரிசாராயத்தில் 375 மி.லி பிடிக்கக்கூடிய இரண்டு பாட்டில்களில் தலா 350 மி.லி அளவிற்கு மாதிரி எடுத்து ஏற்கனவே நாங்கள் வைத்திருந்த காடா துணி மற்றும் அரக்கு வைத்து மூடி எஸ்கெச் ஓ சீல் வைத்தேன். அதற்கு ஏ1 ஏ2 என குறியீடு செய்தேன். மேற்படி 35 லி பிடிக்கக்கூடிய 10 லி எரிசாராயம் நிறைந்த கேன் சா.பொ. 2.

3.பின்னர் வெள்ளகோவில் டு காங்கயம் ரோட்டில் குட்டக்காடு என்ற இடத்தில் இருந்த காளியப்பன் என்பவருக்கு சொந்தமான குடோனில் இருந்து 35 லி பிடிக்கக்கூடிய இரண்டு வெள்ளை நிற பிளாஸ்டிக் கேன்களில் இருந்த தலா 10 லி பிடிக்கக்கூடிய அளவில் இருந்த எரிசாராயத்தை மகஜரில் கைப்பற்றினேன். அந்த வெள்ளை நிற கேன்கள் இரண்டு சா.பொ. 3 வரிசை.

4. அதிலிருந்தும் 4 பாட்டில்களில் தலா 375 மி.லி பிடிக்கக்கூடியதில் தலா 350 மி.லி அளவிற்கு அந்த எரிசாராயத்தின் மாதிரி எடுத்து காடா துணியால் சுற்றி அரக்கு வைத்து மூடி எஸ்ெஹச் ஓ சீல் வைத்தேன். அதற்கு பி 1 முதல் பி 4 வரை குறியீடு செய்தேன். சுமார் 500 லி பிடிக்கக்கூடிய இரும்பு தகர டிரம் ஒன்று அது சா.பொ. 4 ஆகும்.

5. பாட்டில் மூடிகள் இரண்டு மூட்டை அது சா.பொ. 5 வரிசை.

6. ஸ்வஸ்திக் கேப்ஸ் என்று எழுதப்பட்ட 180 மி.லி பிடிக்கக்கூடிய பெட் பாட்டில்கள் தலா 1 டஜன் எண்ணிக்கை கொண்ட 35 பெட்டிகள் அந்த பாட்டில்களில் 750 மி.லி பிடிக்கக்கூடிய காலி பெட் பாட்டில்களும் அடங்கியுள்ளன. அது சா.பொ. 6 வரிசை.

7. கேமல் பிராண்ட் கம் பாட்டில்கள் 10 எண்ணிக்கை சா.பொ. 7 வரிசை.

8. டைப் 1 பிளாஸ்டிக் காஸ்டிக் கார்மல் என்ற லேபிள் ஒட்டப்பட்ட 1 கி பிடிக்கக்கூடிய பாட்டில்கள் 10 எண்ணிக்கை (ஆய்வில் 7 எண்ணிக்கைதான் உள்ளது. 3 பாட்டில்கள் எலிகளால் சேதமானதாக அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது) அந்த 7 எண்ணிக்கை பாட்டில்கள் சா.பொ. 8 வரிசை.

9. காக்னெக் பிராண்டி என்று எழுதப்பட்ட லேபிளுடன் கூடிய அரை லிட்டர் பிடிக்கக்கூடிய கண்ணாடி பாட்டில் ஒன்று. அது சா.பொ. 9.

10. 50 லி பிடிக்கக்கூடிய கருப்பு நிற பிளாஸ்டிக் கேன்கள் 9 எண்ணிக்கை சா.பொ. 10 வரிசை

11. 35 லி பிடிக்கக்கூடிய வெள்ளை மற்றும் கருப்பு நிற பிளாஸ்டிக் காலி கேன்கள் 200 எண்ணிக்கை. அது சா.பொ. 11 வரிசை.

12. பஞ்சிங் மெஷின் மற்றும் அதை இயக்கும் மோட்டார் ஒன்று சா.பொ. 12 வரிசை

13. போலி பதிவெண்கள் கொண்ட நம்பர் பிளேட்கள் அதில் டி.என் 69 ஜே 1607 டி.என் 45 ஏ.எக்ஸ் 7227 டி.என் 38 ஏ.கே. 6430 (இரண்டு நம்பர் பிளேட்கள்) டி.என் 39 ஏ.ஜே 2346 (இரண்டு நம்பர் பிளேட்கள்.) டி.என் 01 ஏ.எக்ஸ் 1148 என்ற பதிவெண்கள் கொண்ட நம்பர் பிளேட்கள்.

சா.பொ. 13 வரிசை

14. ஓல்டு மங்க் டீலக்ஸ் ரம் 180 மி.லி என்றும் ரூ.65 என்றும் அச்சடிக்கப்பட்ட லேபிள்கள் 28 கட்டுகள் (ஒரு கட்டில் 2000 எண்ணிக்கை) அது. சா.பொ. 14 வரிசை.

15. கேப்டன் பிராந்தி 180 மி.லி ரூ. 75 என அச்சிடப்பட்ட லேபிள்கள் 41 கட்டுகள் (ஒரு கட்டில் 2000 எண்ணிக்கை) சா.பொ. 15 வரிசை.

16. கிரீன் மேஜிக் 180 மி.லி ரூ. 70 என அச்சிடப்பட்ட லேபிள்கள் 41 கட்டுகள் (ஒரு கட்டில் 2000 எண்ணிக்கை ) சா.பொ. 16 வரிசை.

17. ஓல்டு மங்க் டீலக்ஸ் ரம் 750 மி.லி என அச்சிடப்பட்ட லேபிள்கள் 3 கட்டுகள் (ஒரு கட்டில் 2000 லேபிள்கள்) அது சா.பொ. 17 வரிசை

18. எக்சைஸ் லேபிள்கள் (ஹாலோகிராம்) தலா 20000 வீதம் இரண்டு ரோல்கள் சா.பொ. 18 வரிசை.

19. குடோன் காம்பவுண்டினுள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பி.ஒய் 01 ஏ.எப் 9222 என்ற பதிவெண் உள்ள வெள்ளை நிற ஆம்னி பஸ் ஒன்று ( ஆஜர்படுத்தப்படவில்லை)

20. மேற்படி ஆம்னி பேருந்தில் வைக்கப்பட்டிருந்த தலா 35 லி பிடிக்கக்கூடிய 3 வெள்ளை

-3-

நிற கேன்களில் தலா 10 லி அளவிற்கு எரிசாராயம் இருந்ததை கைப்பற்றினேன். அதிலிருந்து தலா 375 மி.லி பிடிக்கக்கூடிய 6 கண்ணாடி பாட்டில்கள் தலா 350 மி.லி அளவிற்கு மாதிரி எடுத்து வெள்ளை காடா துணியால் சுற்றி அரக்கு வைத்து மூடி எஸ்ஹெச் ஓ சீல் வைத்தேன். அதற்கு சி1 டு சி6 என குறியீடு செய்தேன்.

21. மேலும் அந்த பேருந்தில் இருந்து கைப்பற்றப்பட்ட ஸ்வஸ்திக் கேப்ஸ் பெட் காலி பாட்டில்கள் தலா 180 மி.லி பிடிக்கக்கூடியது தலா 12 பாட்டில்கள் பிடிக்கக்கூடிய 4 பெட்டிகள் அதில் 750 மி.லி பிடிக்கக்கூடிய காலிபாட்டில்களும் கலந்திருந்தது. அது சா.பொ. 19 வரிசை.

22. மேலும் அந்த பேருந்தில் இருந்து மதுபாட்டில்களுக்கான தகர மூடிகள் ஒரு மூட்டை அது. சா.பொ. 20.

23. மேலும் அந்த குடோன் காம்பவுண்டினுள் இருந்து டி.என் 39 ஏஎம் 3399 என்ற எண்ணுள்ள பிரவுன் நிற பொலிரோ ஜீப் ஒன்று. அதை சோதனை செய்தபோது அதனுள் பின்சீட்டில் 35 லி பிடிக்கக்கூடிய வெள்ளை நிற பிளாஸ்டிக் கேன்கள் இரண்டில் தலா 10 லி அளவிற்கு இருந்த எரிசாராயத்தை கைப்பற்றி அதில் தலா 375 மி.லி பிடிக்கக்கூடிய நான்கு பாட்டில்களில் தலா 350 மி.லி அளவிற்கு மாதிரி எடுத்து வெள்ளை காடா துணியால் சுற்றி அரக்கு வைத்து மூடி எஸ்ஹெச் ஓ சீல் வைத்தேன். அதற்கு டி1 டு டி4 என குறியீடு செய்தேன். அது சா.பொ. 21.

24. மேலும் அந்த ஜீப்பில் இருந்து வெள்ளை நிற காலி கேன்கள் தலா 35 லி பிடிக்கக்கூடியது 3 எண்ணிக்கை. அது சா.பொ. 22 வரிசை.

25. மேலும் அந்த வாகனத்தில் இருந்து ஓல்டுமங்க் டீலக்ஸ் ரம் 750 மி.லி என அச்சிடப்பட்ட லேபிள் 3 கட்டுகள் (ஒரு கட்டில் 2000 எண்ணிக்கை) அது சா.பொ. 23 வரிசை.

26. மேலும் அந்த குடோன் காம்பவுண்டில் இருந்து டி.என் 39 ஏ.எம் 0550 என்ற பதிவெண் கொண்ட டாடா சபாரி வாகனத்தை கைப்பற்றினேன். அதை சோதனை செய்ததில் அதனுள் சுமார் 35 லி பிடிக்கக்கூடிய ஒரு வெள்ளை நிற பிளாஸ்டிக் கேனில் சுமார் 10 லி அளவிற்கு இருந்த எரிசாராயத்தை கைப்பற்றினேன். அதிலிருந்து மாதிரிக்காக தலா 375 மி.லி பிடிக்கக்கூடிய இரண்டு பாட்டில்களில் தலா 350 மி.லி அளவிற்கு மாதிரி எடுத்து வெள்ளை காடா துணியால் சுற்றி அரக்கு வைத்து மூடி எஸ்ஹெச் ஓ சீல் வைத்தேன். அதற்கு இ1 மற்றும் இ2 என குறியீடு செய்தேன். மேலும் அந்த டாடா சபாரி வாகனத்தில் இருந்து தலா 35 லி பிடிக்கக்கூடிய வெள்ளை நிற பிளாஸ்டிக் கேன்கள் 3 கைப்பற்றினேன். அது சா.பொ. 24 வரிசை.

27. மேலும் அந்த வாகனத்தில் இருந்து மதுபாட்டில்களுக்கான தகர மூடிகள் ஒரு மூட்டை கைப்பற்றினேன். அது சா.பொ. 25.

28. மானிட்டர் பிராந்தி என அச்சிடப்பட்ட லேபிள்கள் 3 கட்டுகள் தலா 2000 எண்ணிக்கை வீதம் அது சா.பொ. 26 வரிசை

29. ஓல்டு சீக்ரெட் பிராந்தி என அச்சிடப்பட்ட லேபிள்கள் 10 கட்டுகள் தலா 2000 எண்ணிக்கை வீதம். அது சா.பொ. 27 வரிசை.

30. அதே குடோன் காம்பவுண்டினுள் இருந்து டி.என் 45 ஏ.சி 8674 என்ற பதிவெண் கொண்ட குருசியர் ஜீப் ஒன்றை சோதனையிட அதில் 35 லி பிடிக்கக்கூடிய வெள்ளை நிற பிளாஸ்டிக் கேனில் இருந்த 10 லி எரிசாராயத்தை கைப்பற்றி அதிலிருந்து மாதிரிக்காக தலா 375 மி.லி பிடிக்கக்கூடிய இரண்டு பாட்டில்களில் தலா 350 மி.லி அளவிற்கு மாதிரி எடுத்து வெள்ளை காடா துணியால் சுற்றி அரக்கு வைத்து மூடி எஸ்ஹெச் ஓ சீல் வைத்தேன். அதற்கு எப்1 மற்றும் எப்2 என குறியீடு செய்தேன்.

31. மேலும் அந்த வாகனத்தில் இருந்து தலா 35 லி பிடிக்கக்கூடிய காலி வெள்ளை நிற பிளாஸ்டிக் கேன்கள் 3 எண்ணிக்கை அது சா.பொ. 28 வரிசை.

32. மேலும் அதிலிருந்து கிரீன்மேஜிக் 750 மி.லி என அச்சிடப்பட்ட லேபிள்கள் 10 கட்டுகள் ஒரு கட்டில் 2000 எண்ணிக்கை உள்ளது. அது சா.பொ. 29 வரிசை.

33. மேலும் அந்த வாகனத்தில் இருந்து தலா 20000 எண்ணிக்கை கொண்ட ஹ◌ாலோகிராம் 2 கட்டுகள். அது சா.பொ. 30 வரிசை.
34. மேலும் அந்த குடோன் காம்பவுண்டினுள் இருந்து டிஎன் 33 ஏடி 1249 என்ற பதிவெண் உள்ள யமஹ◌ா ஆர்எக்ஸ் 135 என்ற வாகனத்தை கைப்பற்றி சோதனை செய்ய அதன் டேங்க் கவரில் கிரீன் மேஜிக் பிராந்தி 750 என்று லேபிள் ஒட்டப்பட்ட 750 மி.லி பிடிக்கக்கூடிய பெட் பாட்டிலில் முழு அளவிற்கு போலி மதுபானம் இருந்தது. மேலும் அந்த கவருக்குள் ஆண்டவர் என்ற லேபிள் ஒட்டப்பட்ட 2 லி பிடிக்கக்கூடிய பாட்டிலில் முழு அளவில் போலி மதுபானம் இருந்தது. அதை கைப்பற்றினேன். அது முறையே சா.பொ. 31 மற்றும் 32.
35. மேற்படி வாகனத்திற்கு அருகாமையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டி.என் 45 ஆர் 5889 என்ற எண்ணுள்ள ஹ◌ீரோ ே◌ஹ◌ாண்டா இருசக்கர வாகனத்தை சோதனை செய்ததில் அதன் பக்கவாட்டில் இருந்த கட்டை பையில் கிளாசிக் பிராந்தி 741 என்று லேபிள் ஒட்டப்பட்ட 5 லி பிடிக்கக்கூடிய வெள்ளை நிற பிளாஸ்டிக் கேனில் முழு அளவிற்கு போலி திரவம் இருந்தது. அதைக் கைப்பற்றினேன். மேலும் அந்த கட்டைபையில் இருந்த மற்றொரு சுமார் 1 லி பிடிக்கக்கூடிய பிளாஸ்டிக் பாட்டிலில் போலி மதுபானம் முழு அளவில் இருந்தது. அது சா.பொ. 33 மற்றும் 34.
36. மேலும் அந்த குடோன் காம்பவுண்டினுள் வைக்கப்பட்டிருந்த 20 லி பிடிக்கக்கூடிய மினரல் வாட்டர் கேன்கள் 25 எண்ணிக்கை (சோதனையின் போது 10 எண்ணிக்கை மட்டுமே இருந்தது மீதி கேன்கள் உருக்குலைந்ததாக குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டது. ) மேற்படி 10 எண்ணிக்கை காலி கேன்கள் சா.பொ. 35 வரிசை.
37. பின்னர் 11.10.2013 ம் தேதி 19.45 மணியளவில் எதிரி பொன்னாத்தாள் என்ற பொன்மணி என்பவரை கைது செய்து அவரது வீட்டில் சோதனை செய்தபோது தலா சுமார் 30 லி பிடிக்கக்கூடிய இரண்டு வெள்ளை நிற பிளாஸ்டிக் கேன்களில் தலா 10 லி அளவிற்கு எரிசாராயம் இருந்தது கண்டறியப்பட்டு மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ 6 ஆகும். அந்த எரிசாராயத்திலிருந்து மாதிரிக்காக தலா 375 மி.லி பிடிக்கக்கூடிய 4 கண்ணாடி பாட்டில்களில் தலா 350 மி.லி அளவிற்கு மாதிரி எடுத்து வெள்ளை காடா துணியால் சுற்றி அரக்கு வைத்து மூடி எஸ் ெ◌ஹச் ஓ சீல் வைத்தேன். அதற்கு ஜி1 முதல் ஜி 4 என குறியீடு செய்தேன்.
38. மேலும் அந்த வீட்டில் இருந்து இரும்பு தகர டிரம் மூடியுடன் கூடியது 2 எண்ணிக்கை கைப்பற்றினேன். அது சா.பொ. 36 வரிசை
39. மேலும் அந்த வீட்டில் இருந்து சேர்மென் பைன் பிராந்தி என அச்சடிக்கப்பட்ட லேபிள்கள் 3 கட்டுகள் தலா 2000 எண்ணிக்கை கொண்டது கைப்ற்றினேன். அது சா.பொ. 37 வரிசை.
40. மேலும் அந்த வீட்டில் இருந்து தலா 20000 எண்ணிக்கை கொண்ட ே◌ஹ◌ாலோ கிராம் கட்டுகள் 2 எண்ணிக்கை. அது. சா.பொ. 38.
41. ஸ்வஸ்திக் கேப்ஸ் பெட் பாட்டில் 180 மி.லி எண் எஸ் 576 என அச்சிடப்பட்ட லேபிள் ஒட்டப்பட்ட 180 மி.லி மற்றும் 750 மி.லி அளவுள்ள காலி பாட்டில்கள் அடங்கிய பெட்டிகள் 20 எண்ணிக்கை. அது சா.பொ. 39 வரிசை.
42. பாட்டில் மூடிகள் ஒரு மூட்டை. அது சா.பொ. 40
43. டைப் 1 பிளாஸ்டிக் காஸ்டிக் கேரமல் என்று லேபிள் ஒட்டப்பட்ட 1 கி கொண்ட 15 பாட்டில்கள். அது சா.பொ. 41 வரிசை.
44. 35 லி பிடிக்கக்கூடிய வெள்ளை நிற காலி கேன்கள் 70 எண்ணிக்கை கைப்பற்றினேன். (சோதனையின்போது நொறுங்கிய நிலையில் வெள்ளை நிற சாக்கில் கட்டி வைக்கப்பட்டுள்ளது. ) அது சா.பொ. 42 வரிசை.

பின்னர் 24.10.2013 ம் தேதியே இரவு 11.30 மணியளவில் காங்கயம் டு கோவை ரோட்டில் அகஸ்திலிங்கம் பாளையம் முல்லைநகரில் உள்ள ஆர்எஸ் குடோனை சோதனை செய்தபோது 45. 35 லி பிடிக்கக்கூடிய வெள்ளை நிற பிளாஸ்டிக் கேன்கள் 4 எண்ணிக்கை அதில் தலா 10 லி வீதம் இருந்த எரிசாராயத்தில் தலா 375 மி.லி பிடிக்கக்கூடிய 8 பாட்டில்களில் தலா 350 மி.லி அளவு மாதிரி எடுத்து வெள்ளை நிற காடா துணியால் சுற்றி மூடி அரக்கு சீல் வைத்து எஸ்ெ◌ஹச்ஓ சீல் வைத்தேன். அதற்கு எஸ் 1 டு எஸ் 8 எனக் குறியீடு செய்தேன். மேலும் அந்த வீட்டில் இருந்து கேரமல் எசன்ஸ் 1 கி அளவுள்ள 5 பாட்டில்கள் கைப்பற்றினேன். அது சா.பொ. 43 வரிசை.
46. ஸ்டிக்கர் ரோல் 1. அது சா.பொ. 44.
47. ஸ்டிக்கர் ரோல் கட்டு ஒரு கட்டுக்கு 100 வீதம் 50 கட்டுகள். அது சா.பொ. 45 வரிசை.
48. மில்லேனியம் வென்னிலா எசன்ஸ் 500 மி.லி அளவு கொண்டது 3 பாட்டில்கள் அது சா.பொ. 46 வரிசை.
49. கேமல் கம் நீல நிற பாட்டில்கள் 700 மி.லி அளவு கொண்டது 10 பாட்டில்கள் சா.பொ. 47 வரிசை.
50. காலி வாட்டர் கேன்கள் 10 எண்ணிக்கை (சோதனையின்போது ஆஜர்படுத்தப்படவில்லை)
51. 35 லி பிடிக்கக்கூடிய வெள்ளை நிற காலி கேன்கள் 30 எண்ணிக்கை அது சா.பொ. 48 வரிசை.
52. 50 லி பிடிக்கக்கூடிய நீல நிற காலி கேன்கள் 20 எண்ணிக்கை அது சா.பொ. 49 வரிசை.
53. 180 மி.லி பிடிக்கக்கூடிய காலி பிளாஸ்டிக் பாட்டில்கள் இரண்டு பெட்டிகள் ஒரு பெட்டிக்கு 576

எண்ணிக்கை வீதம் மொத்தம் 1152 பாட்டில்கள் . அது சா.பொ. 50 வரிசை.
54. 180 மி.லி என்றும் கிரீன்மேஜிக் பிராந்தி லேபிள்கள் ஒரு கட்டுக்கு 2000 எண்ணிக்கையில் 16 கட்டுகள். அது சா.பொ. 51 வரிசை.
55. கிரீன்மேஜிக் பிராந்தி 750 மி.லி என எழுதப்பட்ட லேபிள்கள் 1 கட்டு 2000 எண்ணிக்கை கொண்டது. அது சா.பொ. 52
56. மானிட்டர் டீலக்ஸ் பிராந்தி 180 மி.லி என்று அச்சிடப்பட்ட லேபிள்கள் 2 கட்டுகள் தலா 2000 எண்ணிக்கையில் அது சா.பொ. 53
57. டி.என் 42 வி 2370 என்ற பதிவெண் கொண்ட பச்சை நிற டி.வி.எஸ் எக்செல் சூப்பர் இருசக்கர வாகனம் ஒன்று(ஆஜர்படுத்தப்படவில்லை)

பின்னர் 25.10.2013 ம் தேதி மாலை 5.00 மணியளவில் மலைப்பாளையம் பொன்மணி வீட்டிற்கு பின்புறம் உள்ள புதரில் இருந்து எதிரி செவ்வந்து என்பவர் அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்த

58. 35 லி பிடிக்கக்கூடிய வெள்ளை நிற பிளாஸ்டிக் கேன்கள் 2 எண்ணிக்கை தலா 10 லி எரிசாராயம் கொண்டதைக் கைப்பற்றினேன். அதிலிருந்து தலா 375 மி.லி பிடிக்கக்கூடிய 4 பாட்டில்களில் தலா 350 மி.லி அளவிற்கு மாதிரி எடுத்து காடா துணியில் சுற்றி மூடி அரக்கு சீல் வைத்து எஸ்ெ ஹச்ஓ சீல் வைத்து டி1 முதல் டி4 வரை குறியீடு செய்தேன். மேலும் அந்த இடத்திலிருந்து 35 லி பிடிக்கக்கூடிய வெள்ளை நிற காலி கேன்கள் 3 எண்ணிக்கை கைப்பற்றினேன். அது சா.பொ. 54 வரிசை.
59. 50 லி பிடிக்கக்கூடிய நீல நிற காலி கேன்கள் 2 எண்ணிக்கை. (சோதனையின்போது தாக்கல் செய்யப்படவில்லை.)
60. 180 மி.லி பிடிக்கக்கூடிய பிளாஸ்டிக் காலி பாட்டில்கள் 2 அட்டைபெட்டியில் ஒரு பெட்டிக்கு 48 வீதம் மொத்தம் 96 பாட்டில்கள் கைப்பற்றினேன். அது சா.பொ. 55 வரிசை.
61. டைப் 1 பிளாஸ்டிக் கேரமல் என்ற லேபிள் ஒட்டப்பட்ட 1 கி பாட்டில்கள் 2 எண்ணிக்கை. அது சா.பொ. 56 வரிசை.
62. 700 மி.லி வீதம் 3 கேமல் கம் பாட்டில்கள் கைப்பற்றினேன். அது சா.பொ. 57 வரிசை.
63. ஸ்டிக்கர் ரோல் கட்டுகள் எண்ணிக்கை 10. ஒரு கட்டுக்கு 100 வீதம் மொத்தம் 1000 ஸ்டிக்கர்கள். அது சா.பொ. 58 வரிசை.
64. மில்லேனியம் வென்னிலா எசன்ஸ் தலா 500 மி.லி பாட்டில்கள் 2 எண்ணிக்கை. அது சா.பொ. 59 வரிசை.
65. காலி வாட்டர் கேன்கள் 9 எண்ணிக்கை (சோதனையின்போது தாக்கல் செய்யப்படவில்லை.)
66. கிரீன்மேஜிக் பிராந்தி லேபிள்கள் 180 மி.லி என எழுதப்பட்டது. ஒரு கட்டுக்கு 2000 வீதம் 5 கட்டுகள். சா.பொ. 60 வரிசை.
67. மானிட்டர் டீலக்ஸ் பிராந்தி 180 மி.லி என எழுதப்பட்ட லேபிள்கள் 1 கட்டு 2000 எண்ணிக்கை. அது சா.பொ. 61 வரிசையில்
68. காலி அட்டை பெட்டிகள் 10 எண்ணிக்கை (சோதனையின்போது தாக்கல் செய்யப்படவில்லை.)

கைப்பற்றியபோது எடுத்து குறியீடு செய்யப்பட்ட மாதிரிகளை காங்கயம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் படிவம் 95 ன் மூலம் 6.11.2013 ம் தேதி ஒப்படைத்து பின்னர் தக்க வேண்டுகோள் கொடுத்து 8.11.2013 ம் தேதி ஆய்வுக்காக கோவை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு தலைமை காவலர் ரமேஷ் என்பவர் மூலம் அனுப்பிவைத்தேன். அதை ஒப்படைத்ததற்கான ரசீது அ.சா.ஆ 14. பின்னர் 10.11.2013 ம் தேதி மேற்படி தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து அனுப்பப்பட்ட ஆய்வறிக்கையை நீதிமன்றத்திலிருந்து நகல் பெற்றேன். அதன்பிறகு நான் பணி மாறுதலில் சென்றுவிட்டேன்.

<u>குறுக்கு விசாரணை 1 மற்றும் 5 முதல் 8 எதிரிகள் தரப்பில்</u>

இந்த வழக்கின் ஆரம்பம் 7வது எதிரி மணிகண்டனை கைது செய்ததிலிருந்து தொடங்குகிறது என்றால் சரிதான். இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கையில் சம்பவம் நடந்த இடம் என குட்டக்காடு எதிரி காளியப்பன் வீட்டு காம்பவுண்ட் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். காங்கயம் டு கோவை மெயின்ரோடு அதிக போக்குவரத்து உள்ள பகுதி என்றால் சரிதான். 7வது எதிரி மணிகண்டனை கைது செய்த இடத்திற்கு அருகாமையில் ரிலையன்ஸ் பெட்ரோல் பங்க் உள்ளது என்றாலும் அங்கு பணியாளார்கள் இருந்தார்கள் என்றாலும் சரிதான். அதற்கு அருகாமையில் பஞ்சர் ஒட்டும் கடை மற்றும் சில கடைகள் உள்ளது என்றால் சரிதான். அந்த பெட்ரோல் பங்க் மற்றும் அருகாமையில் இருந்த கடைகளில் இருந்த நபர்களை தனிநபர் சாட்சியாக நான் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன் ஆனால் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. அவ்வாறு விசாரிக்கப்பட்ட நபர்களின் பெயர் மற்றும் முகவரி இந்த வழக்கில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தனிநபர் சாட்சிகளிடம் வாக்குமூலம் பதிவு செய்யாததற்கு காரணம் உள்ளதா என்றால் அவர்கள் பயந்துகொண்டு வாக்குமூலம் கொடுக்க முன்வரவில்லை அதுபற்றிய குறிப்பு எதையும் நான் வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். ஒரு எதிரியை கைது செய்யும்போது அதே இடத்தில் கைது குறிப்பாணை தயாரிக்கவேண்டும் என்றால் சரிதான். அதன்படி எதிரி மணிகண்டனை கைது செய்யும்போது நான் கைது குறிப்பாணை தயாரித்தேன். மணிகண்டனை கைது செய்த இடத்தில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் நான் தயாரித்துள்ளேன். அந்த மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர்

வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உண்மையில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி கைது சோதனைகள் மற்றும் கைப்பற்றுதல்கள் ஆகியன முடிந்து காவல்நிலையம் சென்றபிறகுதான் 12.10.2013 ம் தேதி இரவு 12.30 மணிக்குமேல் குற்ற எண் கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மணிகண்டனை கைது செய்ததிலிருந்து சுமார் 12 மணி நேரத்திற்கு பிறகு இந்த வழக்கில் குற்ற எண் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.
ஆனால் மணிகண்டனை கைது செய்தபோது தயாரிக்கப்பட்ட கைது குறிப்பாணையில் வழக்கின் எண். 11.10.2013 ம் தேதி மதியம் 12.05 மணிக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே நான் சொன்ன நாள் மற்றும் நேரத்தில் சொன்ன விதத்தில் மணிகண்டன் கைது செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. மணிகண்டனிடமிருந்தும் எதிரி பொன்மணி என்ற பொன்னாத்தாள் என்பவரிடம் இருந்தும் கைப்பற்றியதாக சொல்லப்படும் வழக்கு சொத்துக்கள் 21.10.2013 ம் தேதிதான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். காங்கயம் ரோட்டில் உள்ள ஆர்.எஸ் குடோனைப் பற்றி எதிரிகள் பூபதி மற்றும் சரவணன் ஆகியோர் விவரம் சொன்னபிறகுதான் எனக்கு தெரியவந்தது என்றால் சரிதான். மேற்படி ஆர்.எஸ் குடோன் காங்கயம் மதுவிலக்கு பிரிவு காவல்நிலையத்தில் இருந்து சுமார் 5 கி.மீ தூரத்தில் உள்ளது என்றால் சரிதான். மணிகண்டன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலேயே ஆர்.எஸ் குடோனை பற்றிய தகவல் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 11.10.2013 ம் தேதியே ஆர்.எஸ் குடோனை பற்றி மணிகண்டனிடம் வாக்குமூலத்தின் மூலம் தெரியவந்த பிறகும் 24.10.2013 வரை நான் ஆர்.எஸ் குடோனுக்கு சோதனைக்கு செல்லாமல் இருந்ததற்கு என்ன காரணம் என்பதை வழக்கில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எங்களது காவல்நிலையத்தில் இருந்து 5 கி.மீ தூரத்தில் உள்ள ஆர்.எஸ் குடோன் குறித்து ஏற்கனவே தகவல் தெரிந்திருந்தும் எதிரிகள் பூபதி மற்றும் சரவணன் ஆகியோரை நீதிமன்றத்திலிருந்து காவல்துறை காவலில் எடுத்தபிறகு அவர்கள் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் சோதனைக்கு சென்றதாகவும் வழக்கு சொத்துக்களை கைப்பற்றியதாகவும் சொல்வது நம்பும்படியாக இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் பயன்படுத்தியதாக சொல்லப்படும் வாகனங்கள் திருட்டு வாகனங்கள் என சொல்லப்பட்டுள்ள நிலையில் அதுபற்றிய முதல் தகவல் அறிக்கையோ, அல்லது புகார் நகல்களையோ அல்லது உரிமையாளர்களின் வாக்குமூலங்களையோ பெற்று தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள கைப்பற்றுதல் மகஜர்களான அ.சா.ஆ 1, அ.சா.ஆ 6, மற்றும் அ.சா.ஆ 8 ஆகியவற்றில் வழக்கு எண்ணோ காவல்நிலையத்தின் பெயரோ எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எதிரிகளிடமிருந்து கைப்பற்றியதாக சொல்லப்படும் எரிசாராயத்திலிருந்து மாதிரி எடுத்தது போக மீதம் உள்ளவற்றை காவல்நிலையத்தில் நான் வைத்திருந்ததை எனக்கு பின்னால் வந்த புலனாய்வு அதிகாரி ஆப்பக்கூடல் சர்க்கரை ஆலைக்கு அனுப்பிவைத்துள்ளார். மாதிரி எடுப்பதற்கான பயன்படுத்தப்படும் பாட்டில்கள் கழுவி சுத்தம் செய்யப்பட்டதாக இருக்கவேண்டும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பாட்டில்களில் லேபிள் ஒட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் அது கழுவி சுத்தம் செய்யப்பட்டுள்ளதாக இருந்தால் அதன்மேல் லேபிள் இருக்காது என்றால் சரியல்ல. மாதிரி எடுக்க நான் பயன்படுத்திய பாட்டில்களும் மதுபாட்டில்கள்தான் என்றால் சரிதான். ஒவ்வொன்றிலும் நான் எடுத்த இரண்டு மாதிரிகளும் ரசாயன பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எடுத்த இரண்டு மாதிரிகளில் ஒன்றை நீதிமன்றத்தில் பாதுகாப்பாக வைக்கவும் மற்றொன்றை சோதனைக்கு அனுப்பிவைக்கவும் வேண்டுகோள் கொடுத்தீர்களா என்றால் அதுபோன்று தனியாக வேண்டுகோள் கொடுக்கவில்லை. இந்த வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்த புலனாய்வு அதிகாரி என்னை விசாரித்தாரா என்றால் விசாரித்தார் வாக்குமூலம் பதிவு செய்தாரா என்றால் பதிவு செய்தார். மேற்படி சோதனைகள் மற்றும் கைப்பற்றுதல்கள் முடிந்தபிறகு யாரிடமாவது புகார் ஏதும் பெற்றீர்களா என்றால் பெறவில்லை நேரடியாக வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் யாருடைய பாதுகாப்பில் வைக்கப்பட்டது என்பது குறித்து எந்த குறிப்பும் வழக்கில் இல்லை என்றால் சரிதான். நான் கைப்பற்றியதாக சொல்லப்படும் வழக்கு சொத்துக்கள் விஷசாராயம் என்பதை அறியும் வகையில் அதை ஏற்கனவே அருந்தி பாதிக்கப்பட்ட நபரிடமோ, அல்லது அதுபற்றிய புகார் ஏதுமோ முன்னதாக பெற்றீர்களா என்றால் பெறவில்லை. எதிரி பொன்மணி என்பவரது வீடு குறித்த மாதிரி வரைபடத்தில் அவரது வீட்டிற்கு பின்பகுதியில் காடு ஏதும் இருப்பதாக நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரி மணிகண்டனை கைது செய்ததற்கான கைது அட்டையில் தேதி மற்றும் நேரம் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன காரணத்திற்காக எதிரிகள் கைது செய்யப்படவில்லை என்றாலும் எதிரிகளிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறப்படவில்லை என்றாலும் அதனடிப்படையில் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொன்னதுபோல் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. கைப்பற்றிய சொத்துக்களுக்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. மற்ற எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலங்களில் சொல்லியுள்ள சங்கதிகளை தவிர 1 வது எதிரிக்கு எதிராக வேறு ஏதேனும் ஆவண ஆதாரம் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை.

<u>குறுக்குவிசாரணை 2, 3 மற்றும் 10 எதிரிகள் தரப்பில்</u>

இந்த வழக்கின் தகவலாளி நான்தான் என்றால் சரிதான். சோதனையின்போதும் வழக்கு சொத்துக்களை கைப்பற்றியபோதும் என்னுடன் இருந்த சாட்சிகள் எனக்கு கீழ் பணிபுரியும்

பணியாளர்கள் என்றால் சரிதான். மேற்படி வாகனத்தணிக்கை மற்றும் சோதனையின்போது திருச்சி மண்டலத்தை சேர்ந்த புலனாய்வு காவல் ஆய்வாளர் பத்மா என்பவர் உடனிருந்தாரா என்றால் இல்லை. உண்மையில் மேற்சொன்ன சோதனையின்போது அவர் என்னுடன் இருந்தார் என்றும் நான் ஏதோ ஒரு காரணத்திற்காக மறுக்கிறேன் என்றால் சரியல்ல. அவர் அப்போது என்னுடன் இருந்த விவரத்தை நான் முதல் தகவல் அறிக்கையிலேயே சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். குட்டக்காடு என்ற இடத்தில் காளியப்பன் என்பவரது காம்பவுண்டில் நான் சோதனை செய்தபோது அருகாமையில் வசித்த பழனிச்சாமி முத்துராஜ் லீலாவதி ஆகியோரை நான் சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் மேற்படி நபர்கள் எதிரி காளியப்பன் காம்பவுண்டிற்கு அருகாமையில் வசிப்பதாக நான் பார்வை மகஜரில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி நபர்களை சாட்சிகளாக விசாரிக்காததற்கு குறிப்பிட்ட காரணம் ஏதும் உள்ளதா என்றால் அவர்கள் சாட்சி சொல்ல முன்வரவில்லை. எதிரி காளியப்பன் என்பவரது காம்பவுண்டை சோதனையிட்டபோது எழுதப்பட்ட பார்வை மகஜரை (அ.சா.ஆ 2) நான்தான் தயாரித்தேன். மேற்படி அ.சா.ஆ 2ல் சிவநாதபுரத்தை சேர்ந்த சின்னச்சாமி என்பவருக்கு சொந்தமான இடத்தில் வழக்கில் கைப்பற்றப்பட்ட வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சின்னச்சாமி என்னால் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றால் சரிதான். சான்றுபொருட்கள் 3 முதல் 35 வரிசை வரை உள்ள வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்ட இடம் 3ம் எதிரிக்கு சொந்தமானது என்பதைக் காட்டுவதற்கு ஆவண ஆதாரங்கள் எதுவும் பெற்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் பெறப்படவில்லை. இதுகுறித்து சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அதிகாரியையும் நான் விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். உண்மையில் சான்று பொருட்கள் 3 முதல் 35 வரிசை வரை கைப்பற்றியதாக சொல்லப்படும் இடம் 3வது எதிரி காளியப்பனுக்கு சொந்தமானது அல்ல என்றாலும் அந்த இடத்திற்கும் வழக்கின் சொத்துக்களுக்கும் 3ம் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட அன்றே பார்வை மகஜர் மாதிரி வரைபடம் சாட்சி 2 முதல் 8 வரை யானவர்களின் வாக்குமூலங்களை நான் தயார் செய்தேன் என்றால் சரிதான். ஆனால் மேற்படி பார்வை மகஜர் மாதிரி வரைபடம் மற்றும் மேற்சொன்ன சாட்சிகளின் வாக்குமூலங்கள் ஆகியவை முதல் தகவல் அறிக்கையுடன் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்படாமல் 5 ஆண்டுகள் கழித்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்சொன்ன ஆவணங்கள் வழக்கிற்காக பின்னிட்டு தயாரிக்கப்பட்டதால்தான் தாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றால் சரியல்ல. காளியப்பனிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் வழக்கு சொத்துக்களை எந்த தேதியில் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றால் 21.10.2013 ம் தேதி அனுப்பிவைக்கப்பட்டது. 9 நாட்கள் காலதாமதமாக அனுப்பியதற்கு காரணம் ஏதும் உள்ளதா என்றால் பிற அவசர வேலைகளால் காலதாமதம் ஆனது. நான் சொல்வதுபோல் இந்த வழக்கில் எந்த வாகனங்களும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகள் காந்திமதி கோமதி ஆகியோரை எந்த தேதியில் விசாரித்தேன் என்றால் 12.10.2013 ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்பிறகு மறுவிசாரணை ஏதும் செய்தீர்களா என்றால் செய்யவில்லை. வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள லேபிள்கள் எங்கு தயாரிக்கப்பட்டது என விசாரணையில் தெரியவந்ததா என்றால் பாண்டிச்சேரியில் தயாரிக்கப்பட்டதாக தெரியவந்தது. அதுசம்பந்தமான பாண்டிச்சேரி சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பெற்றீர்களா என்றால் விசாரிக்கவில்லை. மேற்சொன்ன லேபிள்கள் மற்றும் ஹாலோகிராம்கள் போலியானவைதான் என்பதை உறுதி செய்ய சம்பந்தப்பட்ட அசல் லேபிள்கள் மற்றும் ஹோலோகிராம் உரிமையாளரயோ கலால் அதிகாரிகளையோ விசாரித்தீர்களா என்றால் விசாரிக்கவில்லை. மேற்படி லேபிள்கள் மற்றும் ஹாலோகிராம்கள் போலியானவை என்பதை உறுதி செய்ய நிபுணரின் சோதனைக்கு அதை அனுப்பிவைக்கவில்லை என்றால் சரிதான். 3 ம் எதிரியின் இடத்தை சோதனை செய்ய சோதனை உத்தரவு ஏதும் நான் பெறவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களாக தாக்கல் செய்யப்பட்டுள்ள காலி கேன்கள் தண்ணீர் கேன்கள் போன்றவற்றிற்கு குறிப்பிட்ட அடையாளம் ஏதும் இல்லை என்றாலும் சாதாரணமாக வெளிசந்தையில் கிடைக்கக்கூடியவை என்றாலும் சரிதான். 3வது எதிரியின் குடோனுக்கு சென்றபோதே அங்கு என்னென்ன பொருட்கள் இருந்தது என்பதை நான் பார்த்தேன் என்றால் சரிதான். 3வது எதிரியின் குடோனில் இருந்து தப்பி ஓடியதாக சொல்லப்படும் 7 எதிரிகள் யார் என்பதை சொல்லமுடியுமா என்றால் இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள மற்ற எதிரிகள்தான் அவர்கள் ஆவார். அவ்வாறு தப்பி ஓடிய எதிரிகள்தான் இந்த வழக்கின் மற்ற எதிரிகள் என்பதை ஏதேனும் வழக்கு ஆவணத்தில் நான் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. சாட்சிகள் குமார் செல்லபாண்டி ஆகியோரை உண்மையில் நான் விசாரிக்கவில்லை என்றாலும் விசாரித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 3வது மற்றும் 10வது எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. குட்டக்காடு குடோனை சோதனை செய்தபோது அதற்கு சொந்தமானவர் தப்பி ஓடிவிட்டதால் யாரையேனும் கைது செய்யவேண்டும் என்பதற்காக அதன் அருகில் வசித்த 3வது மற்றும் 10வது எதிரிகளை வழக்கில் தவறாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 3ம் எதிரியை நான் சொன்ன நாள் மற்றும் நேரத்தில் சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால்தான் கைது செய்த நேரம் கைது குறிப்பாணையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. அதனால்தான் பின்னிட்டு

குறிப்பிடப்பட்ட குற்ற எண் முன்னதாகவே கைது குறிப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கின் எதிரிகள் யார் யார் என்பதை நான் எனது விசாரணையின்போதே முடிவு செய்துவிட்டேன் என்றால் சரிதான். இந்த வழக்கை புலனாய்வுக்காக வேறு புலனாய்வு அதிகாரியிடம் ஒப்படைக்காமல் நானே புலனாய்வு செய்தது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் 3 மற்றும் 10 எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

<u>குறுக்குவிசாரணை 2 மற்றும் 9 எதிரிகள் தரப்பில்</u>

2 மற்றும் 9 எதிரிகளிடமிருந்து நான் எந்தவொறு பொருட்களும் கைப்பற்றவிலை என்றால் சரிதான். இந்த வழக்கில் நான்தான் புகார் தாரர் என்றாலும் முதல் தகவல் அறிக்கையை நான்தான் பதிவு செய்தேன் என்றாலும் சரிதான். 2வது மற்றும் 9வது எதிரியை இந்த வழக்கில் நான்தான் கைது செய்தேன் என்றால் நான் கைது செய்யவில்லை அவர்கள் நீதிமன்றத்தில் சரணடைந்தார்கள் நான் அவர்களை காவல்துறை காவலில் எடுத்து விசாரித்தேன். நான் இந்த வழக்கின் முதல்விசாரணையின் போது வழக்கு கோப்பை பார்த்துத்தான் சாட்சிசொன்னேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் தனிநபர் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றாலும் அதன்பேரில் வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றாலும் சரிதான். பொதுவாக காலியிடம் என்பது எந்தவிதமான கட்டுமானமும் இல்லாமல் பொருட்கள் ஏதும் வைக்கப்படாமல் உள்ள இடம்தான் காலிஇடம் என்றால் சரிதான். 2ம் எதிரி ராமச்சந்திரனிடம் 31.1.2013ம் தேதி ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதாக அவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் சொல்லியிருந்தால் அது தவறானதாகும். 31.10.2013 என்பதுதான் சரியானதாகும். 2 மற்றும் 9 வது எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.